பக்கங்கள் 6 விலை சதம் 40 ★

# ஈழநாடு
THE EELANAADU

மலர் 20 மாசி 13 ரபி அவ் 16 இதழ் 15
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 25-2-78

லாலா
நீலசோப்
எல்லா கடைகளிலும் கிடைக்கும்
லாலா சோப் தொழிற்சாலை
அச்சுவேலி

# அமிர் - ஜே. ஆர். சந்திப்பு

## முக்கிய விவகாரங்கள் குறித்துபேச்சு!

## நல்லூர் சிவசிதம்பரமும் கலந்துகொண்டார்

[கொழும்பு]

எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கமும் நல்லூர் தேசிய அரசுப்பேரவை உறுப்பினர் திரு. எம். சிவசிதம்பரமும் நேற்று ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவைச் சந்தித்து தமிழ் மக்களின் பல பிரச்னைகள் பற்றி பேச்சுவார்த்தை நடத்தினர்.

திரு. ஜெயவர்த்தன சர்வவல்லமை பொருந்திய மக்களால் தெரிவுசெய்யப்பட்ட முதலாவது ஜனாதிபதியாகப் பதவியேற்றபின்னர் முதல் தடவையாக தமிழர்விடுதலைக்கூட்டணித் தலைவர்கள் நேற்று சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர்.

இந்தப் பேச்சுவார்த்தை சுமார் ஒருமணி நேரம்வரை இடம்பெற்றது.

கடந்த ஆகஸ்ட் கலவரத்துக்குப் பின் யாழ்ப்பாணம் வந்த குண்டசாலை விவசாயக்கல்லூரி மாணவர்களுக்கு வடபகுதியில் பயிற்சி அளிக்கஏற்பாடுசெய்து தருமாறு இவர்கள் இருவரும் ஜனாதிபதியை வற்புறுத்தியதாகத் தெரிகிறது.

### அகதிகள் புனர்வாழ்வுச் சபை

அகதிகள் புனர்வாழ்வுச் சபையை ஒரு தர்மஸ்தாபனமாக அரசு அங்கீகரிக்கவேண்டும் என்றும் இவர்கள் ஜனாதிபதியை வற்புறுத்தியதாகத் தெரிகிறது. (ம. இ)

## மார்ச் 21-ல் கொழும்பு மேற்கு இடைத்தேர்தல்!

(கொழும்பு)

கொழும்பு மேற்கு இடைத்தேர்தல் அடுத்த மாதம் 21-ம் திகதி நடைபெறும். இத்தேர்தலில் போட்டியிடுவதற்கு 8 பேர் நியமனப்பத்திரங்கள் தாக்கல்செய்துள்ளனர்.

ஐக்கிய தேசியக்கட்சி வேட்பாளராக திரு அனுரா பஸ்ரியனும், சுதந்திரக்கட்சிவேட்பாளராக திரு டி வி அபயக்கோனும், லங்கா சமசமாஜக் கட்சி வேட்பாளராக திரு பெர்ளுட் சொய்ஸாவும் போட்டியிடுகின்றனர்.

திருவாளர்கள் எஸ் ஏ கருணநாயக்கா, ஆர். விஜயஇந்திரா, பி கே எஸ் விஜயவர்த்தன, லால் குணவர்தன, பியசிங்க பெரேரா ஆகியோர் சுயேச்சையாகப் போட்டியிடுகிறார்கள். (ம-இ)

## கொழும்பில் மனோரமா

[கொழும்பு]

சிரிப்பு நடிகை மனோரமா நேற்று கொழும்புவந்து சேர்ந்தார்.

இந்தியா திரும்பிய சிவாஜி கணேசன் இன்று மீண்டும் கொழும்பு திரும்புவார். [ம-இ]

## கூட்டணி நடவடிக்கை குழு திருமலையில் இன்றுகூடுகிறது

### இராசு கலந்து கொள்வார்?

[திருமலை]

தமிழர் விடுதலைக் கூட்டணி நடவடிக்கைக் குழு இன்று காலை திருக்கோணமலையில் கூடுகிறது.

கூட்டணியின் புதிய அமைப்பு விதிகள் இக்கூட்டத்தில் ஆராயப்படவிருக்கிறது.

திருக்கோணமலை எம். பி. திரு. இரா. சம்பந்தன் இல்லத்தில் இக்கூட்டம் நடைபெறும்.

இக்கூட்டத்தில் மட்டக்களப்பு முதலாவது எம். பி. திரு. எஸ். இராசதுரையையும் கலந்துகொள்ளச் செய்வதற்கு கிழக்கு மாகாண கூட்டணி பிரமுகர்கள் முயற்சி எடுத்து வருவதாகத்தெரியவருகின்றது

## பல்கலைக்கழக அனுமதி: இம்மாத இறுதிக்குள் முடிவு!

[கொழும்பு]

இலங்கைப் பல்கலைக் கழக வளாகங்களில் இவ்வருடத்தில் அனுமதிபெறும் மாணவர்கள் பற்றி இறுதிமுடிவு எடுப்பதற்காக அதுபற்றிய சகல புள்ளி விபரங்களும் பல்கலைக்கழக அதிகாரிகளிடம் வழங்கப்பட்டுள்ளது.

இத்தகவலை பரீட்சை ஆணையாளர் திரு. இரத்நாயக்கா தெரிவித்தார். பல்கலைக்கழக அதிகாரிகளினால் பல்கலைக்கழக அனுமதி பற்றிய இறுதிமுடிவு இம்மாத இறுதிக்குள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் கூறினார்.

இதேவேளையில் கடந்த வருடம் நடைபெற்ற ஜி. சி. ஈ. உயர்தர பரீட்சை முடிவுகளை மீளாய்வு செய்வதற்கு 2,500 பரீட்சார்த்திகள் விண்ணப்பித்துள்ளனர் என்றும் இவற்றில் இரசாயன பாடத்திற்கே அநேக பரீட்சார்த்திகள் விண்ணப்பித்துள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

மீளாய்வுக்கு விண்ணப்பித்தவர்களும் தகுதி இருந்தால் பல்கலைக்கழகங்களில் அனுமதி பெறுவர் என்றும் திரு. இரத்நாயக்கா தெரிவித்தார். (ம-இ)

அப்பரின்
இனி என்ன. கலியாணம்
பல பரிசுகள் பெற்ற நகைச்சுவை நாடகம்
26-2-78 வீரசிங்கம் மண்டபம் மாலை 6-32
டிக்கட்: 5/-, 3/-, 2/- 8606

யாழ். லயன்ஸ் கழகத்தின்
சமூக சேவை நிதிக்காக
யாழ். மனோகராவில்
3-3-78 வெள்ளிக்கிழமை
மக்கள்திலகம் — தமிழ்நாடு முதலமைச்சர்
எம். ஜி. ஆர்.
இரு வேடங்களில் நடிக்கும்
ஊருக்கு உழைப்பவன்
(ஈஸ்ட்மன் கலர்)
டிக்கட் விபரம்: ரூ 25-00, 20-00, 15-00, 10-00, 5-00, 3-00
கிடைக்குமிடங்கள்:
கொமேஷல் ஏஜன்ஸீஸ், 17, மின்சார நிலைய வீதி.
சமுத்திரா ட்றேட்ஸ், 23/2, ஸ்ரான்லி வீதி.
மலேயன் றேடியோ சேவிஸ், 45, கஸ்தூரியார் வீதி.
டாக்டர் யோகுபசுபதி, கஸ்தூரியார் வீதி.
ஹட்டன் நஷனல் வங்கி, ஆஸ்பத்திரி வீதி.
கொமேஷல் வங்கி, ஆஸ்பத்திரி வீதி.



யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இன்று மாலை நடைபெறும் பரதநாட்டிய நிகழ்ச்சியில் செல்வி மாலதி தர்மா நடனவிருந்தளிக்கிறார். இந்நிகழ்ச்சி யாழ். நுண்கலை மன்றத்தின் ஆதரவில் நடைபெறுகிறது. செல்வி மாலதியுடன் செல்விகள் கண்ணம்மா கந்தசாமி, சகுந்தலா துரைராஜசிங்கம் ஆகியோரும் நடனவிருந்தளிப்பர். 'சிலப்பு' நாட்டிய நாடகமும் இடம் பெறும்.

## காங்கேசன் தொழிற்சாலை தற்காலிக ஊழியர் வேலைநீக்கம் தலைவர் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையிலுள்ள சகல அமய ஊழியர்களையும் வேலையினின்றும் நீக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை தலைவர் திரு. அசோகா டபிள்யூ. சோமரத்தின வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: காங்கேசன் சீமெந்து தொழிற்சாலை தொழிற்சங்கங்கள் விடாப்பிடியாக நடத்திய

[6ம் பக்கம் பார்க்க]

### இன்றைய இதழுடன்

திருவள்ளுவர் திருநாளை ஒட்டி இன்றைய இதழுடன் வள்ளுவர் படம் இணைக்கப்பட்டுள்ளது, இது ஒரு மில்க்வைற் அன்பளிப்பு.

## திரியாய் ம. வி. விளையாட்டுப் போட்டி

[திருக்கோணமலை]

திரியாய் மகாவித்தியாலய இல்ல விளையாட்டுப் போட்டி இம்மாதம் 28 ம் திகதி வித்தியாலய மைதானத்தில் நடைபெறவிருக்கிறது.

பிரதம கல்வியதிகாரி ஜனாப் எம். எம். மன்சூர், திரு. இரா. சம்பந்தர் எம். பி., உதவி அரசாங்க அதிபர் திரு. கே. பரராசசிங்கம் ஆகியோர் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வர். வித்தியாலய அதிபர் திரு. க. கனகசுந்தரம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவை உடற் கல்வி அதிகாரி திருமதி எஸ். என். வின்ஸ்லோ ஆரம்பித்துவைப்பார். (அ)

## விசாரணை ஒத்திவைப்பு

[யாழ்ப்பாணம்]

பாவற்குள கொலை வழக்கு வவுனியா மேல்நீதிமன்றத்தில் நீதிபதி ஜனாப் எம். எம். அப்துல்காதர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு மார்ச் 22-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இவ்வழக்கில் பவற்குளத்தில் செல்லமுத்து என்ற வயோதிப மாதை கொலை செய்ததாக பெ. இரத்தினசாமி பெ. நாகமுத்து சி. கணேஸ் சிவக்குமார் ஆகியோர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி கனக மனோகரனும் அரசதரப்பில் சட்டத்தரணி எம். கனகரத்தினமும் ஆஜரானார்கள்.

## 'நல்லமுறையில் பஸ்சேவை அமைய முயற்சிப்பேன்'
### சாவகச்சேரியில் இ. போ. ச. உதவி முகாமையாளர்

[கொடிகாமம்]

''தற்போதுள்ள சேவையை மாற்றி நல்ல முறையில் அமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். புதிய பஸ் சேவை நடாத்ததற்போதுபோதியளவு பஸ் வண்டிகள் இல்லை. ஏற்கனவே ஏற்றுக்கொள்ளப்பட்ட சேவையை நடாத்துவதற்கு ஒழுங்கு செய்யப்படும்.''

சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தில் நடந்த பஸ் பிரயாணிகள் ஆலோசனைக் கூட்டத்தில் பேசிய இ. போ. ச. உதவி முகாமையாளர் ஜனாப் ஹுசைன் மேற்கண்டவாறு கூறினார்.

இக்கூட்டத்தில் சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம், பருத்தித்துறை, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, காரைநகர் டிப்போ அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் பேசுகையில், புதிய பஸ் சேவையை நடாத்த வேண்டிய அவசியத்தை அமைச்சரிடம் தெரிவித்து, ஒழுங்கு செய்வதாகக் கூறினர். [ச]

## இன்று
## 'புதிய சுவடுகள்' நூல் அறிமுகம்

[யாழ்ப்பாணம்]

திரு. தி. ஞானசேகரனின் ''புதிய சுவடுகள்'' நூல்அறிமுக விழா இன்று மாலை தரும்பசிட்டி சன்மார்க்க சபை மண்டபத்தில் சபைத்தலைவர் திரு. ஏ. ரி. பொன்னுத்துரை தலைமையில் நடைபெறும். யாழ்வளாக விரிவுரையாளர் திரு. நா. சுப்பிரமணியசர்மா திருமதி வள்ளிநாயகி இராமலிங்கம் ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்துவார்கள்.

## திருவள்ளுவர் விழா

[அரியாலை]

ஈட்டுவில் தெற்கு வள்ளுவர் கலைமன்றத்தின் ஆதரவில் இன்று சனிக்கிழமை வள்ளுவர்தின விழா சிறப்பான முறையில் கொண்டாடப்படவிருக்கிறது.

கலைமன்றத் தலைவர் திரு. எஸ். தணிகாசலம் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில் பலர் சொற்பொழிவு நிகழ்த்தவிருக்கின்றனர். அத்துடன் திருக்குறள் கட்டுரை, மனனப் போட்டிகள் நடைபெறவிருக்கின்றன.

## உலகத் தமிழர் பண்பாட்டு இயக்க இலங்கைக் கிளை

[வேலணை]

உலகத் தமிழர் பண்பாட்டு இயக்கத்தின் இலங்கைக் கிளையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் குரும்பசிட்டியில் தமிழகம் இல்லத்தில் பொதுச் செயலாளர் திரு. இரா. கனகரத்தினம் தலைமையில் நடைபெற்ற போது பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு ச ஜெயசேகரன், துணைத் தலைவர்: திரு பொன். பூலோகசிங்கம், இணைச் செயலாளர்கள்; திரு செ பரமநாதன், திரு. வ கந்தசாமி, பொருளாளர்: திரு சி வெங்கடேச சர்மா, துணைப் பொருளாளர்; திரு மா அரிச்சந்திரன்.

மாவட்ட அமைப்பாளர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்:

யாழ்ப்பாணம் திரு கே நித்தியானந்தன், திருகோணமலை கவிஞர் புதுவை இரத்தினதுரை, வவுனியா திரு இ இராசரத்தினம், மலையகம் திரு ஏ வி பி கோமாஸ், கொழும்பு பொன் பூலோகசிங்கம்;

இலங்கைக்கிளையின் பொதுக்குழு உறுப்பினராகப் பின்வருவோர் நியமிக்ப்பட்டுள்ளனர்: திரு எஸ் சிவஞானசுந்தரம், திரு சிவ. மகாலிங்கம், திரு நா பத்மநாதன், திரு அ குணபாலன், திரு க சிவக்கொழுந்து.

இயக்கத்தின் இலங்கைக் கிளையின் காப்பாளர்களாக: வண. பிதா. எஸ். தனிநாயகம் அடிகள், திரு சு வித்தியானந்தன் - தலைவர் யாழ். வளாகம், திரு சி பத்மநாதன் [விரிவுரையாளர் பேராதனை].

20 பேர்கொண்ட உலகத் தமிழர் குரல் நிதி உதவிக் குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

சென்னையில் நடைபெற்ற உலகத் தமிழர் பண்பாட்டு மகாநாட்டில் பொதுக்குழு உறுப்பினராக திரு இரா கனகரத்தினம், திரு இ சற்குருநாதன், திரு ஆ சண்முகலிங்கம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. [உ]

## ரயிலுக்கு....

[6ம் பக்கத் தொடர்ச்சி]

நேற்று புங்கங்குளம் புகையிரத நிலையத்தில் நிகழ்ந்துள்ளது.

அரியாலையைச் சேர்ந்த செல்லையா கேதீஸ்வரன் என்ற 27 வயது இளைஞரே இவ்வாறு மரணமானவராவார். இம்மரணம் தொடர்பான விசாரணையை யாழ்ப்பாணம் திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு எஸ் அமிர்தலிங்கம் நடாத்தினர். இவ்விசாரணையில் தெரியவந்துள்ளதாவது

இங்கிலாந்து செல்லவிருந்த காலஞ்சென்றவர் சம்பவ தினம் இரவு மெயில் ரயில் புங்கங்குளம் ரயில்நிலையத்தை வந்தடைந்தபோது புகையிரதம் நிற்கு முன்னரே ரயிலில் பாய்ந்து ஏற முற்பட்ட சமயம் கால் தவறி விழுந்தாரென்றும் இதனால் இவரது உடல்இரண்டுதுண்டுகளாக்கப்பட்டது என்றும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது

விசாரணை முடிவில் விபத்தினால் ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது [கா

......

## ஜீப் வண்டி விபத்து

(திருமலை)

உப்புவெளி பொலிஸ் நிலைய ஜீப்வண்டி ஒன்று துறைமுக வீதியில் சென்றுகொண்டிருக்கையில் குடைசாய்ந்து கடலில் வீழ்ந்தது. இதில் சென்ற மூவரில் ஒருவர் கண்கள் பாதிக்கப்பட்டும் இருவர் அபாயகரமான நிலையிலும் உடனடியாக ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். (க)


## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

விவசாயிகளின் நலன் கருதி நீமியா உரத்தின் விலை குறைக்கப்பட்டுள்ளது. 10 றாத்தல் கொண்ட பைக்கற் ஒன்றின் விலை ரூபா 5/- மட்டுமே. கூடுதல் கொள்வனவிற்கு விசேட கழிவுண்டு. மில்க்வைற், யாழ்ப்பாணம். 8555

பாவித்த வெற்று பரல்கள் விற்பனைக்குண்டு. ஞாயிற்றுக்கிழமைகளில் பார்வையிடலாம். மில்க்வைற், யாழ்ப்பாணம். 8584

### தேவை

யார்க்கரு விநாயகர் தேவஸ்தானத்துக்கு சிவாசாரியர் ஒருவர் தேவை. வெள்ளி, சனி, ஞாயிறு நாட்களில் நேரில் வரவும். மனேஜர், யார்க்கரு விநாயகர் தேவஸ்தானம், கரவெட்டி. 8578

நன்கு காய்ந்த எலுமிச்சங் கோது தேவை. மில்க்வைற். யாழ்ப்பாணம். 8585

மாநகரசபை எல்லைக்குள் மின்சாரவசதியுள்ளதும்-சிறிய குடும்பம் வசிப்பதற்கு ஏற்றதுமான வீடு வாடகைக்குத் தேவைப்படுகிறது. விளம்பர இல: 8598, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 8598

### WANTED

''Wanted immediately smart young girl for an establishment in Jaffna dealing in cycles, water pumps etc. Should possess knowledge of english typing, experience in sales and accounts. Also be able to maintain stock cards. Apply before 4-3-78 with copies of testimonials and state salary expected. Advt. No. 8597, C/o Eelanadu Ltd, P. Box No. 49, Jaffna.''

8597


## அரவம் தீண்டி மரணம்

(மட்டக்களப்பு)

மீன்பிடிக்கச்சென்ற 7 பிள்ளைகளின் தந்தையான தொழிலாளி ஒருவர் அரவம் தீண்டி மரணமானார். வவுணதீவுப் பகுதியிலுள்ள கரவெட்டி என்னுமிடத்தில் இப்பரிதாப சம்பவம் நடைபெற்றுள்ளது.

கரவெட்டியைச் சேர்ந்த க. சதாசிவம் [43 வயது] என்பவரின் மரணவிசாரணையில் மேற்படி விபரம் தெரியவந்தது.

ஈச்சந்தீவு கிராமசபை திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. ஞா. சிவபாதம் மரணவிசாரணை நடாத்தி நீர்ப்பாம்புக் கடியினால் மரணம் ஏற்பட்டதெனத் தீர்ப்பளித்தார். [க]


The Fine Arts Society, Jaffna

யாழ். நுண்கலை மன்றம்

## பரத நாட்டியம்

o

## சிலம்பு

(நாட்டிய நாடகம்)

பங்குபற்றுபவர்கள் :

செல்வி மாலதி தர்மா

செல்வி சகுந்தலா துரைராஜசிங்கம்

செல்வி கண்ணம்மா கந்தசாமி

**இன்று** (25-2-78 சனிக்கிழமை மாலை 6-30 மணி)

வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்

டிக்கற் விபரம் :

ரூபா 25/- (2 ஆசனங்கள் ரிசேர்வ்ட்)

ரூபா 15/- (1 ஆசனம் ரிசேர்வ்ட்)

ரூபா 10/- ரூபா 5/-

டிக்கற் ரிசேர்வ் செய்யும் இடம் :

பரணி பார்மசி, யாழ்ப்பாணம்.

8552

## நீதிமன்ற விற்பனவு விளம்பரம்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

வழக்கு இல: ஈடு / 940

ஏழாலை மேற்கு, ஏழாலையைச் சேர்ந்த
செல்லையா இரத்தினம் வாதி

எதிராக

இளையதம்பி ஐயாத்துரை, ஏழாலை கிழக்கு, ஏழாலை காலஞ்சென்ற ஏழாலை சின்னத்தம்பி இளையதம்பியின் சொத்துக்களுக்கு சட்டப் பிரதிநிதி.

பிரதிவாதி

மல்லாக மாவட்ட நீதிமன்றத்தின் ஈடு/940ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த நீதிமன்றக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் காணி நிலப்பரப்பு 3 செய்பயிர், வான்பயிர்களும் 1978-ம் ஆண்டு பங்குனிமாதம் 30-ந் திகதி வியாழக்கிழமை [1978-3-30] முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

மேற்குறித்த பிரதிவாதி குறித்த வாதிக்கு ரூபா 3725/-வும், மேலும் ரூபா 2000/- வருடமொன்றுக்கு நூற்றுக்கு 10% வட்டி வீதம் வழக்கு அணைத்த திகதியாகிய 1975-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 21-ந் திகதியிலிருந்து தீர்வைத் திகதியாகிய 1976-ம் ஆண்டு வைகாசி மாதம் 10-ந் திகதி வரையுமான வட்டியும், அதன்பின் தீர்வை முழுத்தொகைக்கும் இறுக்கப்படும்வரை சட்ட வட்டியான வருடமொன்றிற்கு நூற்றுக்கு 5 வீத வட்டியும் வழக்குச் செலவு ரூபா 663-60½ சதம் கொடுக்கவேண்டும். இதில் 21-1-77-ல் தீர்வைத் தொகையில் கொடுத்த ரூபா 1150/- கழித்து மிகுதி அறவிடப்படும்.

### குறித்த ஆதன இடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப்பகுதி மல்லாகக் கோவிற்பற்று ஏழாலை இறை ''நளவந்தனை'' நிலப்பரப்பு 3 செய்பயிர், வான்பயிர்களும் எல்லைகிழக்கு ஒழுங்கை. வடக்கு கையொழுங்கை. மேற்கு மரியதாஸ் பெண் ஞானம்மாவின் ஆதனம், தெற்கு இளையதம்பி நவரத்தினத்தின் ஆதனம். இவ்வெல்லைப்படி இதடங்கலும், தெற்கெல்லைக் காணிக்குள்ளிருக்கும் கிணற்றில் இதற்குரிய பங்கும் வழிவாய்க்கால் உரித்தும்.

சி. ஆ. த. வடிவேலு J. P.
நீதிமன்ற
விற்பனை ஆணையாளரும்
விலைமதிப்பாளரும்.

''வடிவேல் உதயம்''
காங்கேசன்துறை வீதி,
கோண்டாவில்,
7-2-78.

8601

## வேலைவாய்ப்பு

மத்திய கிழக்கு நாடுகளிலும் மேற்கு ஆசியாவிலும் வேலைவாய்ப்புகள். உடன் நேரிடையாக தொடர்பு கொள்ளவும் ''MANPER'' யாழ். கிளை 144, அம்மன் ரோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். 8599

## பதவி வெற்றிடம்

கூட்டுறவுக் கிராமிய வங்கி கிளை முகாமையாளர் தரம் 2 பதவிக்கு சங்கானை ப. நோ. கூ. சங்கஎல்லைக்குள் வசிப்போரிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

முடிவுத்திகதி: 04-03-78.

விபரங்களுக்கு தொடர்புகொள்ளவும்: தலைவர், ப. நோ. கூ. சங்கம், சங்கானை. 8600

ஈழநாடு
The Eelanaadu

## கலகத்தை தூண்டும் முயற்சி!

மாணவர்களைத் தூண்டிவிட்டு நாட்டில் இனக்கலவரம் ஏற்படுத்துவதற்குச் சில சக்திகள் முயற்சிசெய்கின்றன.

இதற்கு இடமளிக்காத முறையிலேயே நாட்டிலுள்ள சகல பாடசாலைகளும் இரண்டு தினங்கள் மூடப்பட்டன.

தேசிய அரசுப்பேரவையில் கல்வி அமைச்சர் திரு. நிஸங்கா விஜயரத்ன இப்படித் தெரிவித்திருக்கிறார்.

தரப்படுத்தல் நீக்கப்பட்டதை ஆட்சேபித்தும் மீண்டும் அதை அமுலுக்குக் கொண்டுவர வேண்டுமென்றும் சிலர் தூண்டுகிறார்கள். இதற்காகப் பல்கலைக்கழக வளாகங்களில் மாணவர்களைப் பகிஷ்கரிக்கச் செய்யவும் இவர்கள் ஏற்பாடு செய்துவந்தனர்.

தரப்படுத்தல் தமிழ்மாணவர்களுக்குப் பெரும் கேடு செய்ததை நாடே அறியும். இப்பொழுது அது நீக்கப்பட்டிருக்கிறது. தரப்படுத்தலை நீக்கியதன்மூலம் சிங்கள மக்களுக்கு எந்தவித பாதகமான விளைவும் ஏற்படமாட்டாது என்று கல்வி அமைச்சர் உறுதியளித்திருக்கிறார். ஆனாலும் தரப்படுத்தல்வேண்டும் என்று சிலர் வற்புறுத்துகிறார்கள்.

தங்களுக்கு உரிமைவேண்டும் என்றுதான் யாரும் கேட்பது வழக்கம். மற்றவர்களுக்கு உரிமைகொடுக்கக்கூடாது என்று வற்புறுத்துபவர்களை நமது நாட்டில்தான் காணமுடியும்.

பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியை மிகப்பெரும்பான்மைப்பலத்துடன் மக்கள் தெரிவுசெய்தனர். இத்தீர்ப்பை அரசியல் கட்சிகள் பெருந்தன்மையுடன் ஏற்றுக்கொள்ள வேண்டும். இதுதான் நியாயம்; ஜனநாயகப் பண்பும்கூட.

ஆனால்நாட்டில் கலகத்தை ஏற்படுத்தி அரசாங்கத்துக்கு தொல்லைகொடுத்து ஆட்சியைக் கவிழ்ப்பதற்குச் சில சக்திகள் முயற்சிசெய்துகொண்டே இருக்கின்றன.

இவர்களின் முயற்சிக்கு இந்தநாட்டின் தமிழ்மக்களே பலிக்கடாக்களாக இருக்கின்றனர்.

அரசாங்கம் கடைப்பிடிக்கும் கொள்கையை ஏற்றுக்கொள்ளவில்லையானால் மாற்றுக்கட்சியினர் அதை வெளிப்படுத்துவதற்கு எத்தனையோ வழிகளிருக்கின்றன.

இதைவிடுத்து நாட்டில் கலகத்தையும் இரத்தக்களரியையும் ஏற்படுத்த முயற்சிசெய்யும் சக்திகளைக் கண்டிக்காமல் மறைமுகமாக அதற்கு ஆதரவளிப்பது நாட்டின்மீது பற்றுள்ள எவருமே ஏற்றுக்கொள்ள முடியாத செயலாகும்.

இந்நாட்டிலுள்ள தமிழ் மக்களுக்குப் பிரச்னைகள் இருக்கின்றனவென்றும் அவற்றுக்கு நிரந்தரமான தீர்வுகாணப்படவேண்டுமென்றும் இந்நாட்டிலுள்ள அரசியல் கட்சிகளும் தலைவர்களும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

அரசியல் இயக்கங்களும் தொழிற்சங்க இயக்கங்களும் நாடுமுழுவதிலும் வியாபித்திருக்கின்றன.

ஆனால் இனக்கலவரம் ஏற்பட்டதும் இவைகளால் அதைத்தடுக்க முடியாமல் போவதுதான் ஆச்சரியம்.

ஆட்சிபீடத்திற்கு எந்தக் கட்சியும் வரலாம் போகலாம். ஆனால் நாட்டின் முன்னேற்றம் பாதிக்கக்கூடாது.

நாட்டில் கலகத்தைத் தூண்டிவிடுவதற்கு முயற்சி செய்யும் சக்திகளை ஆட்சிபீடத்திலுள்ளவர்கள் மட்டுமல்ல ஆட்சிபீடத்திலிருந்தவர்களும் ஆட்சிக்குவராதவர்களும்கூட நாட்டின் நலனையும் அமைதியையும் முன்னேற்றத்தையும் கருத்தில்கொண்டு வன்மையாகக் கண்டிக்கவேண்டியது கடமையாகும்.

இனக்கலவரத்தைத் தூண்டிவிடுபவர்கள் யாராயிருந்தாலும் கடுமையாகத் தண்டிக்கப்பட்டால்தான் இது போன்றமுயற்சிகளில் இனி எவருமே ஈடுபடமாட்டார்கள்.

# சேர் பொன். இராமநாதன் வரலாற்றுநூல் 2-ம் பாகம்

சேர் பொன் இராமநாதனுடைய வரலாறு தனி மனிதன் வரலாறு அல்ல. ஈழத்து அரசியல் வானில் அரை நூற்றுண்டிற்கு மேல் தனித்து அரசோச்சிய ஒரு தமிழ்ப் பெருமகனுடைய வரலாறுகும். இத்தகைய ஒரு மாமனிதன் இழி மாநிலத்தில் தோன்றியதை ஒட்டி ஒவ்வொரு மானிடனும் பெருமைப்பட வேண்டும். இத்தகைய ஒரு பெரு மனிதன் எம்மினத்திற் தோன்றியதையிட்டு தமிழராகிய நாம் இரட்டிப்பு மகிழ்ச்சியும் பெருமிதமும் கொள்ள வேண்டும்.

இத்தகையசிறப்பியல்புகளின் உறைவிடமாக விளங்கும் ஒருவரின் வாழ்க்கை வரலாற்றை தமக்கேயுரிய தனி ஆங்கிலச் சொல்லாட்சியுடன் வரையக்கூடிய ஒருவர் இருப்பாராகின் அவர்தான் சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் முன்னாள் முதல்வர் திரு. மு. வைத்திலிங்கம் ஆவர். சேர் பொன் இராமநாதனுடைய முன்னோர், அவரின் தோற்றம், அவர் 1910ம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ஆற்றிய பல்துறை வாழ்க்கைப் பணி போன்றனவற்றை ஏறக்குறைய அறுநூற்றைம்பது பக்கங்களில் வரைந்து 1971ல் மிகச்சிறப்பான முறையில் வெளியிட்டவர் திரு. வைத்திலிங்கம் இந்நூலுக்கு உலகின் பல பாகங்களிலுமிருந்து வெளிவந்த பாராட்டுக்கள் நூலின் பாங்கினைப் பாருக்குப் பறைசாற்றப் போதிய சான்றுகும்.

மீண்டும் ஏறக்குறைய ஏழாண்டுகள் இடைவெளிக்குப்பின் இராமநாதன் அறங்காவற் குழுவின் நிதிஉதவியும் பெற்று சேர். பொன் இராமநாதனின் இரண்டாவது இறுதித் தொகுதி ஏறக்குறைய எழுநூற்று எழுபத்தைந்து பக்கங்களுடன் இவரால் வெளியிடப்பட இருக்கின்றது. 1911ம் ஆண்டு தொடக்கம் அவர் மறைந்த 1930ம் ஆண்டு வரைக்கான காலப் பிரிவை உள்ளடக்கி வெளிவரும் இந்நூலில் இலங்கையின் கல்வி கற்றோரின் பேராளராகத் தெரிவு செய்யப்பட்டது தொட்டு 1915ம் ஆண்டு ஏற்பட்ட இனக்கலவரத்தின் போது அவராற்றிய மாபெரும் பணியையும் இனிது விளக்கி இலங்கையின் விடுதலைப் போராட்டத்தில் அதன் படிப்படி வளர்ச்சியில் அவராற்றிய செயற்கரிய பணியைப் பற்றியும் இலங்கைப் பல்கலைக்கழகம் எங்கு அமையவேண்டும் என்று அவர் எடுத்துரைத்த கருத்துக்களையும் உள்ளடக்கியும் தனது வாழ்வின் இறுதிக் காலத்தில் தம் இனத்திற்கு ஏற்படக்கூடியபெரும்பேராபத்துக்களை முன்கூட்டியே அரசியல் உணர்வோடு டொனமூர் எனில் இனிமேல் தமிழர் இல்லையென்று முழங்கி தமது இறுதி மூச்சு உள்ளவரை தன் தள்ளாடும் வயதினைக்கூடப் பொருட்படுத்தாது நெஞ்சம் நெக்குருக கண்களில் நீர் பெருக சேர் பொன். இராமநாதனுடைய வரலாற்றின் இத்தொகுதியில் திரு. வைத்திலிங்கம் வரைந்துள்ளார். இந்நூலில் இராமநாதனின் அருமைத் தம்பி அருணாசலம் அவர்களுக்கு ஒரு தனி அத்தியாயம் ஒதுக்கியிருப்பது நூலுக்கு மேலும் மெருகூட்டுகிறது.

வரலாற்று உணர்வு உரிமைக்கு வித்து என்று சொல்லப்படுகின்றது. இந்த வரலாற்று உணர்வினை எம்மினம் போதிய அளவு பெறுததும் இன்று எம் இழிநிலைக்கு ஒரு காரணமாக அமைகின்றது. தமிழன் வாழ்வு மீண்டும் தலையெடுக்கவும் உலகின் கவனத்தைத் தமிழன்பால் ஈர்க்கும் முறையிலும் சேர். பொன் இராமநாதனின் வரலாற்றின் தனி மனிதன் வரலாறு என்ற எல்லையினையும் தாண்டி ஒரு பெருமை மிக்க தேசியஇனத்தின் வரலாறாக, இன்று வாழும் எம் நிலையினையும் நினைவிற் கொண்டு வரையப்பட்டுள்ள இந்நூல் காலத்தின் தேவையை நிறைவு செய்வதோடு காலத்தால் சாகாது ஞாலத்தில் நிலைத்து நிற்கும் வரலாற்றுக் களஞ்சியமாகவும் மிளிர்கின்றது. குறிப்பாக வரலாற்று உணர்வினை முற்றும் இழந்தநிலையில் எல்லை மீறி உணர்ச்சிவயப்படும் தமிழ் இளைஞர்களுக்கு ஓர் அறிவின் திறவுகோலாகவும் தம்வசதிக்காகத்தம்பழைய வரலாற்றை மறக்க முயலும் நம் முதியோர்க்கு சாட்டையடி கொடுக்கும் நூலாகவும் இந்நூல் ஒளி விடுகிறது.

இந்நூலைப் பயில்கின்றபோது இந்நூலசிரியனின் பரந்து விரிந்த ஆழமான நுண்ணறிவுத்திறன் எம்மை வியப்பில் ஆழ்த்துகின்றது. அவர் சொல்லும் பொருள் எம்மை சிந்திக்க வைப்பதோடு அவர் சொல்லும் முறை நற்சுவை விருந்தாகவும் அமைகிறது. உண்மையில் ஆங்கிலம் அடிபணிந்து செயலாற்றுகின்றது. இத்தகைய ஒரு நூல் இதுவரை வெளிவந்ததுமில்லை இனி வெளிவரப் போகின்றதா என்பதும் பெரும் கேள்வியேயாகும்.

இந்நூலின் வெளியீட்டு விழா வெகுவிரைவில் மிகச் சிறப்பாக யாழ்ப்பாண வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற இருக்கின்றது. ஈழத்தின் பல்துறை அறிஞர்கள் இவ்விழாவிற் கலந்து கொண்டு சிறப்பிக்க இருக்கிறார்கள். இவ்விழா தமிழன் வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக அமையப்போகின்றது என்பது எமது நம்பிக்கை.

—ஈழவேந்தன்

# 'அரசியலுக்கு அப்பால் கடமைகளைச்செய்யுங்கள்'

## கூட்டுறவுச்சங்க புதிய இயக்குநருக்கு 'அமிர்' அறிவுரை

(மாவிட்டபுரம்)

''எமது பகுதிகளின் பொருளாதார அபிவிருத்திக்காகவும், வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்தும்முகமாகவும் கூட்டுறவுச் சங்கங்கள் உழைக்கவேண்டும் ஊழலற்ற நேர்மையான வழியில்செயல்படுங்கள் அரசியலைக் கருத்திற்கொள்ளாது அரசியலுக்கு அப்பால் உங்கள் கடமைகள் இருக்கவேண்டும்''

இவ்வாறு தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெற்ற புதிய இயக்குநர் சபைக் கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் பேசுகையில்கூறினர். அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

"எமது இனத்தின் வாழ்வில் மிகவும்நெருக்கடியானநிலையை நாம் எதிர்பார்த்து நிற்கின்றோம். தென்னிலங்கைப் பகுதிகளில் நமது சகோதரர்கள் வியாபாரம் நடத்தவோ, உத்தியோகம் பார்க்கவோ, தங்கியிருக்கவோ முடியாது எமது சொந்தப் பூமியிலே எமது வாழ்வை வளம்படுத்தவேண்டியநிலை எமக்குஏற்பட்டுள்ளது ஆகவே கூட்டுறவுச் சங்கங்கள் இத்துறையில் பெரும்பணி ஆற்றவேண்டும். எமது சகோதரர்களை வாழ்விக்கும் வகையில் அவர்களது மூலதனங்களையும் சங்கத்தின் மூலதனங்களையும் சேர்த்து கூட்டுறவு முறையில் செயல்படல்வேண்டும். எமது பகுதிகளின் பொருளாதார அபிவிருத்திக்காகவும், வேலைவாய்ப்புகளை ஏற்படுத்து மூகமாகவும் இச்சங்கங்கள் உழைக்கவேண்டும்"

'ஆரம்பத்தில் கூட்டுறவுச் சங்க இயக்குனர்களை சிபார்சு செய்யும் வேலையை அமைப்பாளர்களிடம் வழங்கவே அரசு நினைத்தது. ஆனால் நாம் இதற்கு ஆதரவளிக்கவில்லை. பலமுறை எதிர்த்து இது குறித்து வாதாடி இறுதியில் எமது சிபார்சுடன் நீங்கள் தவறுவிட்டால் மக்கள் கேட்பார்கள். மறுபுறம் அரசாங்கம் என்னைத் தட்டிக்கேட்கும். ஆகவே இருபுறங்களிலும் எனக்கு பழிச்சொல் ஏற்படாத முறையில் செயல்படவேண்டும் கடந்த அரசுகாலத்தில் இருந்த நிலைமைபோல்; கூட்டங்களுக்கு சங்க லொறிகளில் ஆட்களை ஏற்றி இறக்கும் வேலையில் நீங்கள் இறங்கிவிடாதீர்கள்.

'கூப்பன்கள் குறைந்த காரணத்தால் ஊழியர்களை வேலை நீக்கம்செய்துவிடாமல் அவர்களைப் பயன்படுத்தி வேறுநடவடிக்கைகளில் ஈடுபடுங்கள் பொருளாதார வளர்ச்சியில் நீங்கள் காட்டும் அக்கறை எமது அரசியல் இயக்கத்திற்கு துணையாக இருக்கும் என்பதில் ஐயமில்லை; என்றார்.

காங்கேசன்துறைத் தொகுதி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளரும், முன்னாள் சங்கத் தலைவருமான திரு ரி. பி. முருகையா பேசுகையில்;

'கூட்டுறவு இயக்கம் மக்கள் இயக்கமாக விளங்கவேண்டும். கிராமிய மட்டத்தில் பொது மக்களது தேவைகளை நிறைவேற்றிவைக்கும் பணியில் முன்னின்றுழைக்கவேண்டும், கூப்பன்கள் குறைந்துள்ள நிலையில் சங்கம் தொடர்ந்தும் சிறந்து இயங்கவேண்டுமானுல் சகல அரசாங்க கூட்டுத்தாபனங்களதும், ஏனைய நிறுவனங்களினதும் முகவர்களாக கூட்டுறவுச் சங்கத்தையே நியமிக்க வேண்டியது அவசியம் என்றார்.

தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கப் புதியதலைவராக நியமிக்கப்பட்ட திரு. எஸ். சிவமகாராசா பேசுகையில் கூறியதாவது:

''கூட்டுறவு இயக்கத்தின் புனிதமான கோட்பாடுகளை அனுசரித்து அவற்றை வளர்த்தெடுக்கும்பணியில் ஈடுபடப் போகும் நாம் எமது கொள்கைகளை இலட்சியங்களைமறந்து விடமாட்டோம். அவற்றை அனுசரித்தே செயல்படும்அதே நேரத்தில், எம்மைச் சிபார்சு செய்த எமது தலைவர் திரு. அமிர்தலிங்கம் மீது பழிச்சொல் ஏற்படக்கூடிய நிலையை

[5ம் பக்கம் பார்க்க]

## மணிவாக்கு

தந்திரத்தால் ஏமாற்ற முயற்சி செய்யாதே; எப்போதும் நேர்மையாகவே தற்காப்புத்தேடிக்கொள். தந்திரத்தை நீ கையாண்டால் உன்னைவிட வல்லவர்களின் தந்திரத்துக்குப் பலியாகிவிடுவாய்.

டாக்டர் மு. வ.

# 'போராட்டங்கள்யாவற்றிலும் நாமே முன்னிற்போம் இளைஞர்களை ஏவிவிடோம்'

(மாவிட்டபுரம்)

''இளைஞர்கள் எம்மீது பூரண நம்பிக்கை வைத்துச் செயல்படுகிறார்கள். ஆகவே அவர்களது நம்பிக்கை வீண்போக நாம் விடமாட்டோம். இளைஞர்களை ஏவிவிட்டுக் கண்ணீர் சிந்தும் தலைவர்களாக இராது போராட்டங்கள் யாவற்றிலும் நாமேமுன்னணியில் நின்று நடத்துவோம்.''

இவ்வாறு காங்கேசன்துறை நடேஸ்வரக் கல்லூரி பெற்றூர் ஆசிரியர் சங்கமும், பழைய மாணவர் சங்கமும் இணைந்து நடத்திய வரவேற்பு விழாவொன்றில் பேசுகையில் காங்கேசன் துறை எம். பி.யும், எதிர்க்கட்சித் தலைவருமான திரு. அ. அமிர்தலிங்கம் கூறினார்.

இக்கல்லூரி பழையமாணவரும், வடடுக்கோட்டை எம். பி யுமான திரு தா. திருநாவுக்கரசுவையும், திரு. அமிர்தலிங்கத்தையும் வரவேற்று உபசரிக்கும் முகமாக இவ்விழா நடந்தது.

திரு அமிர்தலிங்கம் மேலும் பேசுகையில் கூறியதாவது:

''தமிழ் ஈழம் என்ற இலட்சியத்தில் நாம் நம்பிக்கை வைத்துவிட்டோம் அதைச் செயல்படுத்துவதென்று தீர்க்கமாக முடிவும் எடுத்து விட்டோம் ஆகவே இனிமேல் தடைகளை வென்று இலட்சியத்தை அடையும் வழியைப் பார்க்கவேண்டுமேதவிர, அது முடியுமா, முடியாதா என்று சலனப்படுவதால் பயனில்லை.

(5 ப் பக்கம் பார்க்க)

## சீனிக்கு தட்டுப்பாடு

(வவனியா)

வவனியாவில் சீனிக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. சீனிவிலை கூடும் என்ற வதந்தியினாலேயே இத்தத் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. என நம்பப்படுகிறது.

## 'முக்கிய பிரச்னைகள் மூன்று மாதங்களில் தீர்க்கப்படும்'

(யாழ்ப்பாணம்)

உத்தியோக மொழி விதிவிலக்கால் கிடைக்கவேண்டிய சம்பள உயர்வு, மற்றும் சேவை உறுதிப்படுத்தல் 3 மாதகாலத்தில் தீர்த்துவைக்கப்படும் என்று யாழ். கல்வி அதிபதி திரு த. மாணிக்கவாசகர் உறுதியளித்துள்ளார்.

அரசாங்க பொதுச் சேவை தொழிலாளர் சங்க யாழ். கிளைகளால் திரு. க. நவரத்தினம், திரு. எஸ். வீரசிங்கம், திரு. அ. குலசேகரம் ஆகியோர் கல்வி அதிபரைச் சந்தித்து கலந்துரையாடிய போதே மேற்கண்ட உறுதியளிக்கப்பட்டது.

கீழ்க்காணும் விஷயங்களையும் 3 மாத காலத்தில் தீர்த்து வைப்பதாக அவர் தெரிவித்தார்.

பாடசாலைகளில் பதவி உயர்வு, இளைப்பாற்றலால் ஏற்பட்டுள்ள வெற்றிடங்கள் நிரப்புதல், இடமாற்றங்கள், சகல ஊழியர்களுக்கும் பென்சன் திட்டம் நடைமுறைப்படுத்தல்;

சீருடைதுணி விநியோகம் சீராக்குதல், உரிய காலத்தில் சம்பள உயர்வுக்கு திணைக்களத்திலிருந்தே சிபார்சுப்பத்திரம் அதிபர்களுக்கு அனுப்புதல், கடன் வழங்குசபையில் துரிதமாக கடன் எடுக்க உடனடியாக கடன் வழங்குசபைக் கூட்டத்தைக் கூட்டுதல்

இது தொடர்பாக கல்வி அமைச்சருக்கும் ஒரு மகஜர் அனுப்பப்பட்டுள்ளது. [ச

ரூ. 4 கோடி கடத்தல் முயற்சி:

## அரசு அதிகாரிகளுக்கும் தொடர்பு உண்டா?

[கொழும்பு]

150 வருட சரித்திரத்தில் முதல் தடவையாக, சுமார் 4 கோடி ரூபா பெறுமதியான ஜவுளி கடத்தலை, சுங்கப் பகுதியினர் முறியடித்து விட்டனர்.

இச்சம்பவம் தொடர்பாக சுங்கப்பகுதியினர் விசாரணையை ஆரம்பித்துள்ளனர். இக்கடத்தலில் இலங்கையிலும் சிங்கப்பூரிலுமுள்ள பிரபல வர்த்தகர்கள் மட்டுமன்றி சில உயர்தர அரச உத்தியோகத்தர்களுக்கும் தொடர்பு உண்டென சுங்கப் பகுதியினர் நம்புகின்றனர்.

நத்தார் புதுவருடத்தின் போது பல நோக்கு கூட்டுறவு சங்கங்கள் மூலம் பாவனையாளர்களுக்கு 60 ரூபா விதம் விற்கப்படும் என அரசாங்கத்தினால்,அறிவிக்கப்பட்டநைலக்ஸ் சாறி ரகங்களுக்கு பதிலாகவே, இந்த உயர்ரக ஜவுளிகள், கடத்தலில் இடம்பெற்றதாக கூறப்படுகிறது.

சுங்க பகுதி உத்தியோகத்தர்கள் 222 பெட்டிகளை திறந்து பார்த்தபோதே இந்த விபரம் தெரியவந்தது.

## யாருடையது?

ஒட்டுமடம் சந்திக்கு அருகாமையில் பிரப்பங்குளத்தைச் சேர்ந்த என். ராசா என்பவரால் கண்டெடுக்கப்பட்ட திறப்பு கோர்வை ''ஈழநாடு'' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் பெற்றுக் கொள்ளவும்.

## கிளிநொச்சியில் கைத்தொழில் பேட்டை 500 பேருக்கு வேலைவாய்ப்பு

[உருத்திரபுரம்]

இந்தியா சென்றிருக்கும் கிளிநொச்சி எம். பி. திரு. வி. ஆனந்தசங்கரி இம்மாத இறுதியில் நாடு திரும்புவாரெனத் தெரிய வருகிறது.

கிளிநொச்சித் தொகுதியில் பெரிய அளவில் கைத்தொழில் பேட்டை ஒன்றை அமைக்கும் நோக்கமாக இந்தியாவில் இயங்கும் கைத்தொழில் நிறுவனங்களைப் பார்வையிடுவதற்காக எம். பி. திரு. ஆனந்தசங்கரி அங்கு சென்றுள்ளதாகவும் நாடு திரும்பியதும் தொழிலதிபர்களின் ஒத்தாசையுடன் கிளிநொச்சித் தொகுதியில் கைத்தொழிற் பேட்டை அமைக்கும் முயற்சி நடைபெறுமென்றும், வேலையற்ற 500 பேருக்கு வாய்ப்பளிக்கும் வகையில், இக்'கைத்தொழிற்பேட்டை அமையுமென்றும் நெருங்கியவட்டாரங்கள் தெரிவித்தன. (க)

'அந்தணன் திடல்—கப்புது

## குறைகளை அகற்ற நடவடிக்கை எடுப்பேன்'

-- உடுப்பிட்டி எம்.பி.

[நெல்லியடி]

உடுப்பிட்டித் தொகுதியில் உள்ள அந்தணன்திடல், கப்புது ஆகிய கிராமங்களின் குறைபாடுகளை நேரில் கண்டறிய உடுப்பிட்டி எம.பி திரு. த. இராசலிங்கம் அப்பகுதிகளுக்கு சென்றார். அப்பகுதி மக்கள் எம் பி.க்கு மாலை அணிவித்து அழைத்துச் சென்றார்கள்.

அண்மையில் உடுப்பிட்டி தமிழ் இளைஞர் பேரவையினரும் கரவெட்டி திரு இருதயக் கல்லூரி மாணவர்களும் கூட்டாகச் செயற்பட்டு அமைத்த அந்தணன் திடல்-கப்புது பாதையையும் பார்வையிட்டார்.

பொதுமக்களுடன் கிராமத்தின் தேவைகளைக் கேட்டறிந்த திரு த இராசலிங்கம் பொதுமக்கள் மத்தியில் பேசுகையில் கூறியதாவது:-

'எமது தொகுதியிலேயே மிகவும் பின்தங்கிய பகுதிகள் கப்புது அந்தணன் திடல் என்பதை நான் அறிவேன். இங்கு வைத்தியசாலை வசதியோ மின்சார வசதியோ கிடைக்காது. அத்துடன் உயர்தர பாடசாலை கூடக்கிடையாது என்பதை நான் நன்கு அறிவேன். இப்பகுதியிலுள்ள மாணவர்கள் பல மைல்களைக் கடந்து நெல்லியடி, பருத்தித்துறைப் பகுதிகளுக்கு சென்று கல்வியை கற்கவேண்டிய நிலையில் உள்ளார்கள். பஸ்போக்குவரத்தும் படுமோசமான நிலையில் இருப்பது, எல்லாவற்றையும்விட இப்பகுதி மக்களை பாதிப்பதை நான் நன்கு அறிவேன். ஆதலால். இத்தொகுதியின் தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் என்ற முறையில் மேற்கண்ட குறைகளை அகற்ற நான் முயற்சி எடுப்பேன்.' (க)

## யாழ். பாவனையாளர் சங்கம் உதயம்!

(யாழ்ப்பாணம்)

வர்த்தக அமைச்சின் புதிய திட்டத்திற்கமைய யாழ். நகர மக்களின் நலன்களை சுதந்திரமான முறையில் கவனிப்பதற்கு ''யாழ். பாவனையாளர் சங்க'' மொன்று அமைக்கப்பட்டுள்ளது.

இச்சங்கத்திற்கு இலங்கை சட்டத்தரணிகள் சங்க உப தலைவர் திரு ஏ. அன்ரனி தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இதற்கான காரியாலயம் 83, பாங்ஷால் வீதியில் நிறுவப்பட்டுள்ளது.

இச்சங்கத்தின் விதிகள் அங்கத்தவர்களின் கவனத்திற்குச் சமர்ப்பிக்கப் பட்டுள்ளன. இவை சபையினால் நிறைவேற்றப்பட்டதும், சங்கம் தனது கடமைகளை நிறைவேற்றுமென திரு. ஏ. அன்ரனி நமது நிருபருக்கு தெரிவித்துள்ளார்.

சங்கத்தின் நடப்பு நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவாகினர்.

தலைவர்: திரு ஏ அன்ரனி, உப தலைவர்கள்: திரு கே வீரசிங்கம், திரு பி சண்முகராஜா, செயலாளர்: திரு பி திருநாவுக்கரசு, உப செயலாளர்: திரு சி சிவானந்தம், பொருளாளர்: திரு கே சற்குணனந்தன், இணைப்பு அதிகாரி: திரு ஏ ஆர் ராஜதுரை, கணக்காளர்: திரு ஜோ பத்திநாதர். 10 நிர்வாகசபையினரும் தெரிவாகினர். (செ)

## கொலைவழக்கில் பொலிஸ் கான்ஸ்டபிள் விடுதலை!

(கம்பஹா)

மீகாவத்தை கொலைவழக்கில் எதிரியான பொலிஸ் கான்ஸ்டபிள் விசாரணை நடுவில் விடுதலைசெய்யப்பட்டார்.

இவ்வழக்கு கம்பஹா மேல் நீதிமன்றத்தில் நீதிபதி திரு. சிசில் என் குணவர்த்தன முன்னிலையில் நடைபெற்றது.

இவ் வழக்கில் 76 மே 27 ம் தேதி மீகாவத்தையை சேர்ந்த ஐ பி சொயிஸாவை கொலைசெய்ததாக மீகாவத்தை பொலிஸ் நிலையத்தை சேர்ந்த கான்ஸ்டபிள் எம்.எச். எம். ஹரத் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரி சார்பில் சட்டத்தரணி ஜி ஜி.பொன்னம்பலம் (ஜூனியர்) ஆஜரானார். அரசதரப்பில் சட்டத்தரணி ரஞ்சித் பெரேரா ஆஜரானார்.

நான்கு நாட்கள் நடந்த விசாரணையின் பின் ஜூரி சபையினர் விசாரணையை தொடர விரும்பவில்லையென ஏகமனதாக தெரிவித்ததை தொடர்ந்து நீதிபதி எதிரியை விடுதலை செய்தார். க]

... ...

### அந்தநாள் நினைவுகள் வந்ததே...


(உடுப்பிட்டி)

வடமராட்சிப் பகுதியில் மண்ணெண்ணெய் முதலிய எரிபொருட்களுக்குத் தட்டுப்பாடு நிலவுவதால் முன்னோர் கையாண்ட முறையைப்பின் பற்றித் துலா மூலமும் சூத்திரவாளி மூலமும் நீரிறைத்து வருகின்றனர். எரிபொருள் இல்லாமையால் நீரிறைக்கும் இயந்திரங்கள் தூங்குகின்றன.

இப்போது மென்மையான, செம்மையான, இதமான அநேகம் ஷவரங்கள் எடுப்பதற்கு

கிளஸிக் பிளேட்

(பொலிமர் பூசிய ஸ்டெய்ன்லஸ் உருக்கு)




விநியோகத்தர்கள்:
உறவுஸ் அன்ட் புறொபர்ட்டி ட்ரேட்ஸ் லிமிட்டெட்

RAVI

வின்ஸர் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன் ரஜனிகாந்த்
எம்.எஸ்.விஸ்வநாத் ஸ்ரீதேவி-ஒய். விஜயா
மூன்று முடிச்சு
திரை கதை வசனம், டைரக்ஷன்; கே. பாலசந்தர்

ராஜா தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
[யாழ்ப்பாணம்]
ஜெய்சங்கர்-கே. ஆர். விஜயா-சோ-விஜயகுமார்
நடித்த
மேயர் மீனாட்சி

மனோஹரா (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி - ஈ. வி. சரோஜா
பாக்கிய லக்ஷ்மி (புதிய பிரதி)

Rio NOW SHOWING
Jerry Cotton in
BROADWAY DEADLY GOLD
From 26th MURDER
Count Down To Dooms Day

சாந்தி (யாழ். நகர்) போன்: 7642.
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
பஷிராஜாவின்
மரகதம்
சிவாஜி—பத்மினி நடித்த
(புதிய பிரதி)
28-2-78 நிதியுதவிக்காட்சி பி ப. 2-30 மட்டும்
மருதநாட்டு வீரன்
சனி, ஞாயிறு (25, 26-2-78) காலை 8-30 மணிக்கு மட்டும்
BLACK MOUNTAIN

Regal Jaffna Daily 4-45, 7-00 & 9-30 p.m.
MICHAEL CAINE
in
The Romantic English Woman
(Color)

வெலிங்டன் (யாழ்.நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஏ. வி. எம். ராஜன் — சாரதா
நடித்த
துலாபாரம் [தமிழ்]

கொட்டகை நிறைந்த காட்சியுடன் நடைபெறுகிறது
லிடோ போன் 7693
(யாழ். நகர்)
முத்துராமன், சிவகுமார், சுஜாதா
நடித்த
உறவு சொல்ல ஒருவன்

ஸ்ரீதர் தினசரி 4 காட்சிகள் (யாழ்ப்பாணம்) 70-வது தினம்
அனைவரின் வேண்டுகோளுக்கிணங்க
இன்ஸ்பெக்டர் மனைவி
வருகிறது ஜெமினி, பத்மினி, ராதா நடித்த சித்தி

நாளை 50வது வெற்றித் தினம்
ராணி வி. பி. கணேஷன் — சுபாக்ஷினி
ராம்தாஸ் — ஜெனிட்டா
(யாழ்.நகர்) தினசரி 4 காட்சிகள் நடித்த
நான் உங்கள் தோழன்
50-வது தினத்தை முன்னிட்டு நாளை சகல காட்சிகளிலும் "நான் உங்கள் தோழன்" கலைஞர்கள் மேடையில் தோன்றுவார்கள்.


பொன்னாலைப் பிள்ளையார் கோவில்

# திருட்டைத் தடுக்க முயன்றவருக்குக் கத்திக்குத்து

[சுழிபுரம்]

பொன்னாலைப் பிள்ளையார் கோவிலில் நள்ளிரவில் நடந்த திருட்டு சம்பவத்தின்போது திருட்டை தடுக்க முயற்சித்த எஸ். வீரசிங்கம் என்பவர் கத்திக்குத்துக்காளாகியுள்ளார். பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஆறு பேர் கொண்ட கோஷ்டியினர் கோவிலுக்குள் புகுந்து கத்தி முனையில் அர்ச்சகர் திரு பொ. தியாகராசா, அவரது மகன் பொன்னம்பலவாணர் ஆகியோரை பயமுறுத்தி சில பொருட்களைத் திருடிச் சென்றதாக இச்சம்பவம் பற்றி கூறப்படுகிறது.

கோவில் மணியோசை நள்ளிரவில் ஒலித்ததைத் தொடர்ந்து அயலவர்கள் கோவில் நோக்கி ஓடி வந்து திருடர்களை மடக்கிப் பிடிக்க முயற்சித்ததாகக் கூறப்படுகிறது.

இச்சம்பத்தின்போது திருடர்களைத் துரத்திச்சென்ற எஸ். வீரசிங்கம் கத்திக்குத்துக்கு ஆளானார். ஆயிரம் ரூபா பெறுமதியான அவரது சைக்கிளையும் திருடர்கள்பறித்துச் சென்றுவிட்டனர்.

திருடர்கள் கொண்டுவந்த இரு சைக்கிள்கள் கோவில் வளவிற்கு அருகாமையில் கண்டு எடுக்கப்பட்டுள்ளது.

சங்கானைப் பொலிசார் இச்சம்பவம் தொடர்பாக விசாரணை செய்து வருகின்றனர்.

[க]

## நோயாளிகள் பாதிப்பு

[கரணவாய்]

பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் போதிய டாக்டர் இல்லாததால் வடமராட்சிப் பகுதியிலுள்ள மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். முன்பு பதினொரு டாக்டர்கள் கடமையாற்றிய இந்த ஆஸ்பத்திரியில் தற்போது ஆறு டாக்டர்கள் மட்டுமே கடமையாற்றுகின்றனர்.

இதனுடன் முன்பு இங்கு இயங்கிய தொண்டை, காது, மூக்கு, தோல் ஆகியவற்றிற்கான சிகிச்சை நிலையங்கள் அண்மைக்காலமாக நடைபெறுவதில்லை. தாதிமார்களுக்கும் பற்றாக்குறை நிலவுகிறது.

## போராட்டங்கள்...

[3ம் பக்கத் தொடர்ச்சி]

தந்தை செல்வா காட்டிய வழியில் எமது இலட்சியத்தை யடைய நாம் போராடுவோம். நாம் தற்சமய சூழ்நிலையில் தயங்குவதாக சிலர் நினைக்கிறார்கள். சந்தர்ப்பசூழ்நிலைகள் காரணமாக நாம் தயங்குவது போல் தோன்றினாலும் நாம் எமது இலட்சியத்திலிருந்து சிறிதும் விலகவில்லை என்பது உறுதி.''

வட்டுக்கோட்டை எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு பேசுகையில், ''சுதந்திரம் என்பது இலேசானதல்ல அதை நிலைநாட்டுவதற்கு நாம் திரு. அமிர்தலிங்கத்தைத் தலைவராகக் கொண்டு செயல்பட்டுவருகிறோம். அவருடைய திறமையும், எம்முடைய ஒத்துழைப்பும் சேர்ந்து எமது சுதந்திரத்தைநிலைநாட்ட வழிவகுக்கும்'' என்றார்.

கல்லூரி அதிபர் திரு. பொ. சோமசுந்தரம் தலைமையில் நடந்த இவ்விழாவில் சட்டத்தரணி அ. குமரகுரு, திருமதி வள்ளிநாயகி இராமலிங்கம், திரு நா. கருணானந்தசிவம் உட்படப்பலர் பேசினர். கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

[அ]


வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி: 6-30, 9-30
சனி, ஞாயிறு: 2-30,
சிவாஜி — பத்மபிரியா
வைரநெஞ்சம்

நாகம்ஸ்
[சுன்னாகம்]
தினசரி: 6-45, 10-00
ஜெய்சங்கர்
நடித்த
துணிவே துணை

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 2-30, 6-30, 9-45,
சிவாஜி - வரலட்சுமி
தாய்


## மாணவர் தலைவர்கள் உபவேந்தருடன் சந்திப்பு

[கொழும்பு]

விரக்தியுற்ற சக்திகள் இனக்குழப்பத்தை ஏற்படுத்த முயல்கிறார்கள் என்று பல்கலைக்கழக மாணவர் மன்றப்பிரதிநிதிகள் நேற்று பல்கலைக்கழக துணைவேந்தரைச் சந்தித்து எடுத்துரைத்தார்கள்.

பகிஷ்கரிப்பு முயற்சிகளைத் தாம் ஆதரிக்கவில்லையென்றும் அவர்கள் தெரிவித்தனர்.

......

## யாருடையது?

யாழ்ப்பாணம் மணிக்கூட்டு வீதியில் யாழ். தொலைபேசி பரிவர்த்தனை நிலையத்தில் கடமையாற்றும் வி. கிருஷ்ணபிள்ளையினால், கண்டெடுக்கப்பட்ட கார் சாவியொன்று 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த அத்தாட்சி காட்டிப் பெற்றுக்கொள்ளலாம்.

# கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய பொன்விழா

(அரியாலை)

யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தின் பொன்விழாவைஎதிர்வரும் செப்டம்பர் மாதம் மிகவும் சிறந்தமுறையில் நடாத்த வேண்டுமென்று கல்லூரி அதிபர், கல்லூரி ஆசிரியர்கள், கல்லூரி உயர்வகுப்பு மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், அபிமானிகள் ஆகியோரடங்கிய கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது. கூட்டத்திற்குக் கல்லூரி அதிபர் திரு. யே. எஸ். அரியரத்தினம் தலைமை வகித்தார்.

பொன்விழாவைச்சிறப்பான முறையில் நடாத்துவதற்கெனத் தெரிவு செய்யப்பட்ட பொன்விழா பொதுநிர்வாகச் செயற்குழுவில் நல்லூர்த் தொகுதி தேசிய அரச பேரவை உறுப்பினர் திரு எம். சிவசிதம்பரம் போஷகராகவும், வடபிரதேச கல்வியதிபதி திரு. தி. மாணிக்கவாசகர் உபபோஷகராகவும், அதிபர் திரு யே. எஸ் அரியரத்தினம் தலைவராகவும், திரு. வீ. கதிரவேலு பொதுச் செயலாளராகவும், திரு. ஏ. உபயசேகரம் பொருளாளராகவும் தெரிவுசெய்யப்பட்டனர். அத்துடன்பொன்விழா நிர்வாகச் செயற்குழுவொன்றும் நிறுவப்பட்டுள்ளது.

இக்குழுவின் கீழ் நிதிக்குழு, மலர்க்குழு, பொருட்காட்சிக்குழு, இயற்றமிழ்குழு, நாடகக்குழு, இசைக்குழு, நடனக்குழு, விளையாட்டுக்குழு, சிலைக்குழு, பொன்விழா மண்டபக்குழு என்னும் குழுக்கள் நிறுவப்பட்டுள்ளன.

### கனகரத்தினம் சிலை

கல்லூரியின் ஸ்தாபகரும், யாழ்ப்பாண நகரத்தின் முதலாவது தலைவரும், மன்னார்த் தொகுதி ஸ்டேற்கவுன்சில்முன்னாள் உறுப்பினருமான அமரர் கனகரத்தினத்தை நினைவுகூருமுகமாக கல்லூரியின்வாயிலில் அவரது சிலையொன்றை நிறுவ வேண்டுமென்று ஏகமனதாக முடிவுசெய்யப்பட்டது.

பொன்விழாவையொட்டி பொன்விழா மலரொன்றைச் சிறந்தமுறையில் வெளியிடுவதென்று தீர்மானிக்கப்பட்டதுடன் இம்மலரை வெளியிட திரு. க சொக்கலிங்கம் (சொக்கன்) தலைமையில் ஒரு உபகுழு தெரிவுசெய்யப்பட்டது.

### பொன்விழா மண்டபம்

பொன்விழாவை நினைவுகூருமுகமாக பொன்விழாமண்டபமொன்றை அமைக்கவேண்டுமென்றும், அதற்கு வேண்டிய நிதியின்ஒருபகுதியைநல்லூர்த் தொகுதி தேசிய அரசபேரவை உறுப்பினர் மூலம் அரசாங்கத்திடமிருந்துபெறவேண்டுமென்றும், பழையமாணவர், பெற்றோரிடமிருந்து இதற்கெனநிதி பெற ஏற்பாடுசெய்யவேண்டுமென்றும் ஏகமனதாக முடிவு செய்யப்பட்டது. இதற்கு கல்லூரி அதிபர் திரு. யே. எஸ். அரியரத்தினம் தலைமையில்ஒரு குழு தெரிவு செய்யப்பட்டது.

### போட்டிகள்

பொன்விழாவையொட்டி நடைபெறும் போட்டிகள் அனைத்தும், கல்லூரிமாணவர்-மாணவியர், ஏனைய கல்லூரி மாணவமாணவியர், பழைய மாணவர் அபிமானிகள் ஆகியோர்களைக் கொண்ட மூன்று பிரிவுகளாக நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

[இ]

## அரசியலுக்கு...

[3ம் பக்கத் தொடர்ச்சி]

ஏற்படுத்தமாட்டோம். அப்படியானநிலை ஏற்படுமானால் உடனடியாக ராஜினாமா செய்வோம்'

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

'300ரூபாவுக்குமேல் மாதாந்தம் வருமானமுள்ளவர்களுக்கு கூப்பன் இல்லாமல் செய்யப்பட்டதன்மூலம் இச்சங்கத்தின் கூப்பன் தொகை 40ஆயிரத்திலிருந்து 25 ஆயிரமாக குறைந்துள்ள சோதனையான நேரத்தில் நாம் சங்கத்தை பொறுப்பேற்றுள்ளோம். கூப்பன் புத்தகங்களை காரணமாகவைத்தே இதுவரை ப. நோ. கூ. சங்கங்கள் இலாபகரமாக இயங்கிவந்தன. ஆனால் இனிமேல் கைத்தொழில், விவசாயம் போன்ற துறைகளில் ஈடுபட்டுழைக்க வேண்டியநிலை ஏற்பட்டுள்ளது எம்மீது சுமத்தப்பட்டுள்ள பொறுப்பை உணர்ந்து செயல்படுவோம்' என்றார்.

மானிப்பாய் எம் பி.திரு வி. தர்மலிங்கம், வட்டுக்கோட்டைத்தொகுதி எம்.பி. திரு. தா. திருநாவுக்கரசு திரு. வி. பொன்னம்பலம் திரு. சபாரத்தினம் திரு. எஸ். சிதம்பரநாதன் திருமதி அமிர்தலிங்கம் உட்படப்பலர் பேசினர்.

## காலமானார்

(யாழ்ப்பாணம்)

பிரவுண் சன் இன்டஸ்றீஸ் உரிமையாளரும் 'புளுகர் பொன்னையா', 'கோவூரின் நம்பிக்கை' முதலான நாடகங்களை மேடையேற்றியவருமான வேலணை வீரசிங்கத்தின் தாயார் திருமதி நாகம்மணி ஆச்சிமுத்து காலமானார். இறுதிக் கிரியைகள் இன்று பிற்பகல் வேலணை 'தமிழ்மனை'யில் நடைபெறும்.

# மன்னார் பொலிசாரின் நடத்தை பற்றி முல்லைத்தீவு எம். பி. பேரவையில் தெரிவித்த திடுக்கிடும் தகவல்கள்

(கொழும்பு).

முல்லைத்தீவு எம் பி திரு. எக்ஸ் எம் செல்லத்தம்பு நேற்று தேசிய அரசுப் பேரவையில் ஒத்திவைப்புப் பிரேரணையின்போது மன்னார் பொலிஸ் நிலையத்தில் நடந்ததாகக் கூறப்படும் பொலிஸ் தாக்குதல் சம்பவம் தொடர்பாக யாழ். சிறைச்சாலை அதிபருக்கு எழுதிய சத்தியக்கடதாசி ஒன்றைச் சமர்ப்பித்தார்

தார்மீக அரசு என்று கூறும் இன்றைய அரசு இது போன்ற அநீதிகளைப் பார்த்துக்கொண்டிருப்பதா என்றும் திரு செல்லத்தம்பு பேரவையில் கேட்டார்.

திரு செல்லத்தம்பு பேரவையில் வாசித்த யோகபுரத்தைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை தர்மரத்தினம் என்ற விவசாயியால் யாழ். சிறைச்சாலை அதிபருக்கு எழுதிய சத்தியக்கடதாசியின் விபரம் வருமாறு:

கடந்த பெப்ரவரி 7-ம் திகதி மாலை 4 மணிக்கு 33 ஸ்ரீ 437 என்ற இலக்கத்தையுடைய ஜீப் வண்டியில் யோகபுரத்தில் உள்ள எனது வீட்டுக்கு வந்த மன்னார் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி திரு. ஹெட்டியாராய்ச்சியும் வேறு பொலிசாரும் என்னைக் கைதுசெய்தனர். கைதுசெய்ததுக்கான காரணம்பற்றி எனக்கு எதுவும் தெரியாது. ஜீப்பில் ஒட்டாங்குளத்தை சேர்ந்த சம்பந்த சரணாலயம் என்பவரும் இருந்தார். ஜீப் வவனியா ஊடாக மன்னார் சென்றது.

### கொலை பயமுறுத்தல்

பொலிஸ் நிலையத்தில் பொறுப்பதிகாரி திரு. ஹெட்டியாராச்சி அடித்துக் கொடுமைப்படுத்தி பணிஸ் சில்வா என்பவரைப்பற்றித் தெரியுமா என்றும் அவரைப் பற்றிக் கூறாவிடில் கொலை செய்துவிடுவதாகவும் பயமுறுத்தினர்,

### கம்பத்தில் தொங்கவிட்டனர்

பின்னர் 8-ம் திகதி பொலிஸ் விடுதிக்கு என்னை அழைத்துச் சென்ற பொலிஸார் அங்கே எனது கைகளைப் பின்னால் கட்டி கம்பம் ஒன்றில் தொங்கவிட்டனர். தொங்கிய நிலையில் என்னைப் பலமாக அடித்தனர். உண்மையைச் சொல்லாவிடின் கொலைசெய்துவிடுவதாகப்பயமுறுத்தினர்.

### 4 மணித்தியாலம் தொங்கினேன்

4 மணித்தியாலங்களாகத் தொங்கிய எனது உயிர் ஊசலாடிக் கொண்டிருந்தது அந்நிலையில் என்னைப் பலமாக அடித்தபோது நான் கதறி அழுதேன்

பின்னர் உதவிப் பொலிஸ் அதிபரின் முன்னிலையில் அழைத்துச் செல்லப்பட்டு அவரும் பல மணி நேரம் என்னை விசாரித்தார்

### வெரப்பிட்டியா குறுக்கிடு

திரு செல்லத்தம்பு இந்த சத்தியக்கடதாசியை வாசித்துக்கொண்டிருந்தபோது குறுக்கிட்ட பிரதி பாதுகாப்பு அமைச்சர் திரு ரி பி வெரப்பிட்டியாவும், தோட்டக் கைத்தொழில் அமைச்சர் திரு எம் டி எச் ஜெவர்த்தனவும் இக்கடதாசியை இங்கு வாசிக்க வேண்டிய அவசியமில்லை என்று கூறினர்

உடனே செல்லத்தம்பு அப்படியானால் உங்கள் தார்மீக அரசில் இவ்வாறுதான நடைபெறும் இது போன்ற செயல்களைத் தொடர்ந்தும் அனுமதிக்கப் போகின்றீர்களா? என்றார்

அப்போது குறுக்கிட்ட சபாநாயகர் திரு செல்லத்தம்புவைத் தொடர்ந்து படிக்குமாறு கூறினார்

திரு செல்லத்தம்பு தொடர்ந்து வாசித்தார்:

பெப்ரவரி 10-ந் திகதி எனது கைகளைக் கட்டிய பொறுப்பதிகாரி கதிரை ஒன்றில் ஏற்றி ஒரு கம்பத்தில் எனது கைகளைத் தொங்கவிட்டு பின் கதிரையை இழுத்துவிட்டார்

### 7 மணித்தியாலங்கள் தொங்கினேன்

7 மணித்தியாலங்கள் அப்படியே கயிற்றில் தொங்கினேன். அந்நிலையில் என்னைத் துன்புறுத்தினார்கள்.

பின்னர் என்னை அவிழ்த்துவிட்டபோது மணிக்கட்டில் இரத்தம் கசிந்தது. என்னால் சாப்பிடக்கூட முடியவில்லை.

### நாய்போல் சாப்பிடுமாறு பணித்தார் இன்ஸ்பெக்டர்

என்னால் சாப்பிடக்கூட முடியவில்லை. சாப்பாட்டுப் பார்சலை நிலத்தில் வைத்த இன்ஸ்பெக்டர் நாய்போல் குனிந்து கவ்விச்சாப்பிடுமாறு பணித்து தலையைக் கீழே அமத்தினார். தண்ணீரையும் கீழே வைத்து நாய்போல் குடிக்குமாறு பணித்தார்,

### தலைமயிரை வெட்டினர்

பின்னர் எனது தலைமயிரைப் பிடித்து இழுத்துச் சென்ற பொறுப்பதிகாரி எனது தலைமயிரை வெட்டுவித்தார்.

எதுவித வைத்திய கண்காணிப்பும் அளிக்கப்படவில்லை.

அதே தினம் எனக்கு பொலிஸ்உடை அணிவித்தார்கள். அந்த உடையைக் கூட என்னால் அணிய முடியவில்லை. மிகவும் சிரமப்பட்டு அந்த உடையை போட்டார்கள்.

பின்னர் ஜீப்பில் ஏற்றிக்கொண்டு யோகபுரம், ஒட்டங்குளம், பாண்டியன்குளம், வவனிக்குளம் ஆகிய இடங்களுக்கு அழைத்துச் சென்று சிலருடைய வீடுகளைக் காட்டுமாறு வற்புறுத்தினர்,

### 'பொலிஸ் தொப்பி'

என்னை எவரும் அடையாளம் காணமல் இருக்க எனக்கு பொலிஸ் தொப்பி அணியப்பட்டது.

### மாஜிஸ்திரேட் முன் ஆஜர்

அதேதினம் மன்னார் மாஜிஸ்திரேட் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டு பொலிசாரின் வேண்டுகோளின்பேரில் ரிமாண்டில் வைக்கப்பட்டேன்.

பின்னர் 2 நாட்கள் மன்னார் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு வாக்குமூலம் அளித்தேன். 17ம் திகதி மாலை மன்னார் சிறைச்சாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டேன்.

### யாழ். சிறையில்

18-ம் திகதி யாழ் சிறைச்சாலைக்கு மாற்றபட்டு மாலை யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு இப்போது எனது கைகால்கள் இயங்காத நிலையில் கஷ்டப்படுகிறேன்.

இக்கடதாசியைப் படித்த திரு. செல்லத்தம்பு யோகபுரம்மன்னார்பொலிஸ்நிலைய எல்லைக்குள் இல்லைஎன்பதையும் சுட்டிக்காட்டினார்,

### பிரேமா உறுதி

இதற்குப் பதிலளித்த பிரதமர் திரு பிரேமதாசா இது போன்ற செயல்கள் தொடர்ந்து அனுமதிக்கப்படமாட்டாது என்றும்இத்தகவலைத் தெரிவித்த எம் பிக்கு நன்றி தெரிவிப்பதுடன் சம்பந்தப்பட்டவர்கள்மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் உறுதி அளித்தார்,

(ம-இ)

---

## இன்று திருவள்ளுவர் திருநாள்

## வள்ளுவனை வாழ்த்துவமே

தமிழ்மறை தந்த தவப்பெருங் கடலாம்;
'அமிழ்தினு மினிய அருங்கலைப் புலவன்;
வள்ளுவன் பாதம் வாழ்த்துதும்; போற்றுதும்
தெள்ளு தமிழிற் திருக்குற ளமுதை,
எல்லாச் சமயமும் ஏற்க அளித்தான்
வல்லாண் மைத்தமிழ் வழங்கும் திறத்தோன்;
வள்ளுவன் பாதம் வணங்கி வாழ்த்துதும்;
எல்லா உலகமும் இனிதினி தென்று;
சொல்லிச் சுவைக்கும் தூய தமிழ்மறை
தந்தநான் முகனைத் தலையால் வணங்குதும்.

திமிலைக்கண்ணன்

---

## இன்று மாட்டு வண்டி சவாரி

(யாழ்ப்பாணம்)

கப்டப்பிராய் கலைமணி சனசமூகநிலையத்தின் 29வது ஆண்டு நிறைவு விழாவையொட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு மாட்டுவண்டிச் சவாரிப்போட்டி நீர்வேலி வாய்க்கால்தரவை மைதானத்தில் நடைபெறுகிறது.

இப் போட்டியில் பிரதம விருந்திரைாக கோப்பாய் பொலிஸ்நிலையப்பொறுப்பதிகாரி திரு. செல்வகுமார் கலந்துகொண்டு போட்டியை ஆரம்பித்து வைப்பார்.

(கா. இ)

## தற்காலிக...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கிளர்ச்சியின் காரணமாக முகாமை அமய ஆட்சேர்ப்பு பிரச்னையை மீண்டும் பரிசீலனைசெய்வது அத்தியாவசியமாகியது:

முகாமை சகல காரணிகளையும் கவனமாக மீள்ளாய்வு செய்தபின்னர் இம் முடிவுக்காக ஆழ்ந்த மனவருத்தம் அடைந்தபோதிலும், தற்பொழுது சகல அமைய ஊழியர்களையும் வேலை நீக்கம்செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. சேர்த்துக்கொள்ளப்பட்ட அமய ஊழியர்களில் 80 வீதமானோர் தொழிற் சங்க ஊழியர்களின் பிள்ளைகளாயிருந்தும்,இவ்விடயத்தை தேசியஅரசுப்பேரவையிலும், விவாதத்திற்கெடுத்துமுகாமை இவ்வித முடிவெடுப்பதற்கான நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியது தொழிற்சங்கங்கள் தான் என்பதை தொழிலாளர்கள் நன்கு விளங்கிக்கொள்வார்கள் என நம்புகிறேன்.

தொழிலாளரின் நலனையே முக்கிய நோக்கமாகக் கருதிய நாங்கள் இவ்வித முடிவை எடுத்ததன்காரணமாக தொழிலாளிக்கு ஏற்படும்வசதியீனத்துக்காக மன்னிப்புக் கோர விரும்புகிறோம்.

## தேவை

"எங்களில் ஒருவன்" திரைப் படத்துக்கு நடிப்பதற்கு நடிகர், நடிகையர்கள் தேவை. நடிக்க விரும்புபவர்கள் தமது புகைப்படத்துடன் விபரங்களை சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பிக்கவும். விபரங்களுக்கு: விளம்பர இல: 8611 மே/பா "ஈழநாடு". யாழ்ப்பாணம்.
3611

Y. M. C. A.
TALENT CONTEST
Saturday 25-2-1978 5 P. M.
Chundikuli Girl's College Hall
Tickets Rs 5/-, Rs 2/- available at the gate.
8590

இப்பத்திரிகை 'ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 63 ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1978-ம்ஆண்டு பெப்ரவரி மாதம் 25 ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
The Eelanaadu Post Box No. 49, Jaffna. Telegrams " Telephone 389. Registered as a Newspaper in Srilanka

---

### உடுவில் இரட்டைக் கொலை-கொள்ளை

# ஐவர் கைது!

## ரூ. 30,000 நகைகள் மீட்பு

[யாழ்ப்பாணம்]

உடுவில் இரட்டைக்கொலை கொள்ளை தொடர்பாக சுன்னாகம் பொலிசார் சந்தேகத்தின் பேரில் ஐவரைக் கைது செய்து காவலில் வைத்துள்ளனர்

அத்துடன் கொலையை அடுத்து கொள்ளையடிக்கப்பட்டதாகக் கூறப்படும் 30 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளையும் பொலிசார் மீட்டுள்ளனர்

உடுவிலில் இனந்தெரியாத நபர்கள் கடந்த ஜனவரி மாதம் 12 ந் திகதி தனிமையிலிருந்த கந்தர் செல்லையா [71 வயது]. அவரது மனைவி அன்னம்மா [வயது 68] ஆகியோரைக்கொலைசெய்துவிட்டு அங்கிருந்து பணம்,நகைஆகியவற்றைக் கொள்ளையடித்துச் சென்றது தெரிந்ததே

விசாரணை நடத்திய சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு ரி தாமோதரம் பிள்ளை சிவசுப்பிரமணியம் யெஜேந்திரன், சிவசுப்பிரமணியம் பரமேந்திரன், முத்தையா அன்றா, சின்னையா கிருஷ்ணன், தாமோதரம் பிள்ளை கணேசலிங்கம் ஆகியோரைக் கைது செய்தார்

கைதானவர்களில் ஒருவர் முன்னர் ஒரு பாடசாலையை உடைத்து இரசாயனப் பொருட்கள் திருடியது சம்பந்தமாகத் தேடப்பட்டவர் எனத் தெரிகிறது (இ)

## ரயிலுக்குப் பலி!

[யாழ்ப்பாணம்]

இங்கிலாந்து செல்லவிசாஎடுப்பதற்காக கொழும்புக்குரயில் ஏறிய இளைஞர் ஒருவர் கால் தவறி விழுந்து ரயிலுக்குப் பலியான துயரச் சம்பவம்

[2ம் பக்கம் பார்க்க]

## மரண அறிவித்தல்

### செல்லையா கேதீஸ்வரன்

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் லிகிதராகக் கடமையாற்றிய செல்லையா கேதீஸ்வரன் அகால மரணமடைந்துவிட்டார். அன்னாரின் பூதவுடல் மலர்மகள் வீதி, அரியாலையிலுள்ள அவரது இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காக சித்துப்பாத்தி மயானத்துக்கு இன்று25-2 78 சனிக்கிழமை காலை 10 மணியளவில் எடுத்துச் செல்லப்படும். நண்பர்களும் உறவினர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும். தகவல்: சி.செல்லையா.
8608

## மரண அறிவித்தல்

### வேலணை திருமதி ஆச்சிமுத்து

வேலணையைச் சேர்ந்த திருமதி ஆச்சிமுத்து காலமானார். இவர் காலஞ்சென்ற நாகமணி அவர்களின் பாரியாரும், திருமதி பாக்கியலட்சுமி, காலஞ்சென்ற முத்துலிங்கம் பிரவுண்சன் இன்டஸ்றீஸ் உரிமையாளர் வேலணை வீரசிங்கம் ஆகியோரின் தாயாரும், உருத்திரபுரம் சின்னராசா, திருமதி அமராவதி ஆகியோரின் மாமியாரும், தங்கராசா, தருமராசா, வசந்தி, பவானி, குறளரசு, வேழவேந்தன், ஈழகாந்தன். இளங்கோ, தமிழினி ஆகியோரின் அருமைப் பேத்தியருமாவர். இறுதிச்சடங்குகள் இன்று (25-2-78) சனிக்கிழமை வேலணை தமிழ்மனையில் நடைபெறும்.
8604